12.03.2025
அசல் வழக்கு எண்: 7/2020

பி.வா.சா.1 சாட்சி ராஜேந்திரன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் தெரியும் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.எ.எல்எல்பி படித்துள்ளேன். வழக்கறிஞராக தொழில் செய்கிறேனா என்றால் தொழில் செய்யவில்லை. திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.563/2022 என்ற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் அனந்தகுமார் என்பவருக்கு லீஸ்க்கு கொடுத்த இடத்தை எனக்கு திரும்ப ஒப்படைக்கவேண்டும் என்று பரிகாரம் கேட்டேன்.

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் 24வது பக்கத்தில் கடைசி பேராவில் திருமங்கலம் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.7/2020 நிலுவையில் உள்ளதால் விசாரணை மேற்கொள்வதற்கு இயலாது என்றும் பதிவான ஆவணங்களை ரத்து செய்யும் அதிகாரம் பதிவுதுறை அலுவலருக்கு இல்லை என்றும் உரிய நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பதிவுத்துறை துணைத்தலைவரிடம் மேல்முறையீடு செய்து அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுதான் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 2 ஆவணம் என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் 5வது பக்கத்தில் கடைசியில் மேல்முறையீட்டாளரை பொறுத்து சம்பத் நாராயணனை தொடர்ந்து மேல்முறையீட்டாளர் சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது

தொடர்பான பதிவு செய்யப்பட்ட ஆவண ஆதாரங்கள் காணப்படாததால் தனது உரிமையை உரிய நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்டி பட்டா பெற்று ஆவண பதிவிற்கு தாக்கல் செய்யும் பட்சத்தில் ஆவண பதிவு மேற்கொள்ள தடை ஏதும் இல்லை என உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.563/2022 வழக்கில் அந்த வழக்கில் கண்ட 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக சுவாதினமீட்பு பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 மற்றும் 2 ஆகிய ஆவணங்களில் தாவா சொத்திற்கு நான்தான் உரிமையாளர் என்று எதாவது ஒரு இடத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் மேற்படி ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. தற்போது யாருடைய பெயரில் மின் இணைப்பு உள்ளது என்றால் எனது பெயரில் இருந்தது. ஆனால் தற்போது சாய்லெட்சுமி பெயரில் உள்ளது. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் அதனால்தான் சார்பு நீதிமன்றத்தில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.